உ

எல்லாம் தெய்வச்செயல்.

‘நவமணி’

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. [பாரதியார்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. [திருவள்ளுவர்]

மாலை 1. } பள்ளத்தூர். பிரமோதூத ஆனி. { மணி 6.

தேவதாசிகளா?

நமது சிறந்த பாரதகண்டத்திலே காமிகளும் வயிற்றுப் பிழைப்புக்குத் தன் கையால் வேலைசெய்ய முடியாதவர்களுமாகப் பலர் சேர்ந்து கொண்டு ஒரு சில குடும்பங்களைக் கெடுத்து அக்குடும்பப் பெண்களுக்குப் பொட்டுக்கட்டுதல் என்ற தீய பழக்கமான விபசார முத்திரை போட்டு அவர்கள் தேவ ஊழியர்கள், தேவரடியார்கள், தேவதாசிகள் எனப் பெயர் சூட்டப்பட்டு காமிகளின் துர்ச் செய்கைகளுக்குக் காரணஸ்தர்களாகவும் உத்தமப் பெண்கள் கூட்டத்திற்கு மறுப்போன்றும் விளங்குகிறார்கள் என்பது யாவருமறிந்ததே. இக்கோஷ்டியை சிருஷ்டி செய்வதிலிருந்து பூரணமாக அடக்கிவிடவேண்டுமென்று பல்வேறு இடங்களில் எத்தனையோ வகையான கிளர்ச்சிகள் நடைபெற்றும் இதை

அடக்குவதற்கென்றே பல்வேறு பிரசாரக் கூட்டங்கள் ஏற்பட்டும் கவர்ன்மெண்ட் சட்டங்கள் தோன்றியும் இது அறவே ஒழிந்த பாட்டைக்காணோம். இதை வளர்க்க ஒருவகையான சோம்பேரித் தனமுள்ள காமிகள் கூட்டம் எங்கும் இருக்கிறதெனத் தெரிகிறது. இவர்கள் தங்களுக்கென ஒரு வேலையு மற்றவர்கள். தங்கள் முன்னோர் சிரமப்பட்டுத் தேடிவைத்த சொத்துக்களை வந்த வழியே தெரியாமல் கண்டபடி இத்தியாதி கோஷ்டிகளுடன் கலந்து செலவுசெய்து இவர்களை வளர்ப்பதிலேயே மறைமுகமாகக் காலந் தள்ளுபவர்கள். இவர்களுக்கு இதனால் இம்மைமறுமை என்ற இருவகை சுகங்களும்அற்றுப்போகிற தென்பதை நன்கறிந்திருந்தும் இந்த வேலையை நிறுத்தாமல் மறைமுகமாக இதை ஆதரித்தே வருகிறார்களென்றே அறிகிறோம். இதனாலும் இதனுடன் சேர்ந்த இதர ஆடல்பாடல்களாலும் அவர்கள் தங்கள் பணங்களையெல்லாம் இழந்து நோயினாலும் வறுமையினாலும் அபவாதத்தினாலும் சிரமமுறும் ஆயிரக்கணக்கான ஜனங்களைப் பார்த்தும் அவர்கள் இதை நிறுத்துவதற்குத் தடைக் கல்லாக விளங்குவது ஓர் துக்ககரமான சம்பவமாகும்.

அடுத்து இத்தேவதாசிகளை வளர்ப்பவர்கள் அவர்கள் பந்துக்களாகும். இவர்களைக் கையாலாகாதவர்களென மிகத்தாராளமாகச் சொல்லலாம். நாம் கண்டவரை இத்தியாதிதுன்மார்க்கக் குடிகளில் ஒரு பெண்ணை இம்மாதிரி முத்திரை போட்டுவைத்துவிட்டுப் பல பெண்களும் சில ஆண்களும் அந்த துன்மார்க்க வருவாயிலேயே காலந் தள்ளுகிறார்கள். இச் சோம்பேரிக் கூட்டங்கள் வளர்வதும் துன்மார்க்கப்பெண்களால் இவர்கள் வளர்க்கப்படுவதும் மிகவும் வெட்கக்கேடான விஷயம். இதில் பெருமை யடைந்துள்ளதாக வீரமுடன் வெளிவரும் ஆண்கள் பலரும் அடங்கியிருப்பதுதான் பெரியதுக்கத்திற் கிடமாகும்.

இங்கு துன்மார்க்கத்தி லீடுபடுத்தப்படும்பெண்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயமொன்றுண்டு. அவர்களை இவ்வழியில் ஈடுபடச் செய்து அவர்கள் கையில் வருவாயுள்ளவரை வாங்கியுண்டு சொகுசாகக் காலந்தள்ளிவருவாய் நீங்கி துன்மார்க்கப் பெண்கள் தரித்திரத்தினாலோ, வியாதினாலோ, கஷ்டப்படும் பொழுது சுற்றத்தார் யாவரும் நீங்கிவிடுவதுடன் மேற்கொண்டு

அப்பெண்ணைத் தூற்றவும் செய்கிறார்களென்பது அப்பெண்கள் வாழும் குடும்பங்கள் பலவற்றி னுள்ளும் உண்மையான விஷயம். இதை நன்கறிந்த அப் பெண்கள் பாபத்திற்கும் சிரமத்திற்கும் காரணமாவதோடு தன் கையில் பணம் வரண்டபொழுது தூற்றுத லுக்கும் காரணமாகாமல் ஒரு கணவனை மணந்தால்தான் சிரம மின்றி அவன் தேடிக் கொடுக்கும் சிறிய அளவு கூழாயினும் அதை இருவரும் இன்புற்றுண்டு வாழ விரும்புவதே மேன்மை யென்பதையுணர்ந்து தங்கள் குழந்தைகளையேனும் அத்துறையில் பழக்காமல் விடுவிப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

கூடுமானால், இப்பொழு துள்ள பெரியதாசிப் பெண்களும் தாங்கள் தாங்கள் விரும்பும் ஓரோர்கணவனைத்தேடி தற்கால உலகில் கலப்புமணம், விதவாமணம் பெற்றுவாழும் குடும்பங்களைப் போல் தாங்களும் தம்பதிகளாகவாழ்ந்து தங்கள் காலத்திலேயே அக்கொடிய பழக்கத்திலிருந்து விடுபட்ட பெருமைக்குப் பாத்திர மாகும்படி செய்வதேசாலச்சிறந்ததென இங்கு எடுத்துக் காட்டு கிறோம். இப்பழக்கத்தை குழந்தைகள் காலத்தில் விட்டுவிடுங்கள், விட்டுவிடுங்கள் என எவ்வளவோ அறிவாளிகளும் சென்னை ஸ்ரீமதி. முத்துலக்ஷ்மி யம்மாள், மூவலூர் ஸ்ரீமதி இராமாமருதத் தம்மாள், சென்னை. ஸ்ரீமதி யாமினி பூர்ணத்திலகம்மாள் போன்ற பல்வேறு பெண் சமூகத்தினரும் எடுத்துச் சொல்லியும் 'அருணகிரி' முதலான பத்திரிகைகளில் எம்போன்றோர் எடுத் தெழுதியும் அது சிறிது வெற்றியைக் கொடுத்தபோதிலும் பூரண ஜயங் கிடைத்ததாகக் காணோம். தினந்தோறும் ஒரு துன்மார்க்க குழாமிருந்து இரண்டொருவரை அம் முத்திரை போட்டு இப் பழக்கத்தில் சிறு குழந்தைகளையும் தயார்செய்கிறார்களென்பது சமீபத்தில் கல்லான்குடி, அழகாபுரி, புதுவயல் முதலிய இடங் களில் சில பெண்களை இவ்வழியில் தயார் செய்திருப்பதிலிருந்து நன்கு தெரிகிறது. இதை அறிந்தும் இன்னும் சும்மாவிருமலும் இளஞ் சிறுமிகளைப் பழக்காதீர்கள் என்றே சொல்லிக் காலந் தள்ளாமலும் பெரிய துன்மார்க்கப் பழக்கத்தி லீடுபட்ட பெண் களையுமே திருத்தி அவர்களுக்கும் ஓர் மணமுடித்து இந்த சமூ கத்தில் ஒருவரேனும் துன்மார்க்கிகள் இல்லை யெனச் சொல்லும் படி செய்தால் தான் அந்த சமூக ஆண்கள் தாங்களும் மனிதர்

கள் என வெளிவரலாமே தவிர அவர்கள் இதர சமூகத்தைக் கண்டு தலைகுனிய வேண்டியவர்களே.

இச் சமூகத்தின் ஆண்களும் தங்களையும் அறிவுள்ள மக்களென்றும் உலகியலுணர்ந்தவர்களென்றும் சொல்லிக்கொள்ளுதல் பெரும் பேடித்தனமாது மென்பதற்கு இதைவிட வேறு என்ன சான்றுவேண்டும். இந்தியர்களுள்ளே தீயர்கள் எனத் தள்ளப்பட்டவர்கள் கூட ஒரு பெண் ஒரு கணவனையே மணக்கிறதென்ற ஒழுங்குச் சட்டத்தைக் கைக்கொண்டிருக்கும் பொழுது இவர்கள் இவ்வாறிருந்துகொண்டு தாங்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லுவதில் கிஞ்சிற்றும் அர்த்தமுண்டா என்பதை அறிஞர்கள் யோஜிக்க வேண்டுகிறோம்.

இந்நாட்டில் மிகுதியாய் ஆருய்ந்து தேசஊழியத்திற்சாகவோ அல்லது அவர்களில் சிலர்சொல்லும் பாவியங்களைக் கார்ப்பதற்காகவோ இந்த முறை அனுஷ்டிக்கப்படுகிறதா என்பதை நோக்கினல் இல்லை என்றே சொல்லலாம். அதர்க்கு நிதர்சனம் இந்நாட்டிலுள்ள பல்வேறு துன்மார்க்கப் பெண்கள் கோவிலுக்குப்போவது விசேஷமாக நிகழக்கூடிய காரியமாகவிருப்பதும் அதிகமானபேர் சாப்பாட்டிற்குத் திண்டாடுவதுமே யாகும்.

இங்கிலையில் மற்ருேர் துர்பாக்கியமென்ன வென்ருல் இத்தீய பழக்கத்திற்குப் புதிய நாகரீகம் வாய்ந்த சில பட்டணங்கள் தான் பெரிதும் இடந்தந்துள்ளன வென்ருல் தர்மங்கள் செய்பவர்களாயும் உலகியல் ஒவ்வொன்றிலும் முன்னணி வகிப்பவர்களாயுமுள்ள தனவைசியர் நாட்டின் ஒவ்வோர் கிராமமும் இதற்குப் பெரும் இடந் தந்துள்ளதுதான். இது அச்சமூகச் சிறப்பிற்குப் பெரிய களங்கமாகவிளங்குகிறபடியால் அச் சமூகத்தாரும் முயற்சித்து இதை வேறுடன் களைந்து இத்தியாதி துன்மார்க்க சந்ததிகளை நன்மார்க்கத்தில் ஒன்று திருப்பவேண்டும்; அல்லது அவர்களை சமூக பகிஷ்காரஞ்செய்யவேண்டும்.

இவ்வுண்மைகளை யெல்லாம் நோக்கும் பொழுது இச் சமூகத்தினர் தேவதாசிகள் சமூகம் எனப் பெயர் சூட்டிகொள்ளுதல் தகுமா? அவர்கள் தேவதாசிகளா? என்பதை ஆருய்ந்தால்

துன்மார்க்கிகள் சமூகம் என்ற பெயரே தகும். அப்பெண்களையும் அதை வளர்க்கும் ஆண்களையும் துன்மார்க்கிகள் என்றே சொல்லலாம்.

பொதுவாக பகுத்தறிவுள்ளவர்கள் ஒவ்வொருவரும் பஞ்ச மஹாபாதகங்களில் ஒன்றெனத் தாயுமானவர் போன்றார் சொல்லியுள்ள கொலை களவு கட் காமம் கோபம் விட்டாலன்றோ? மலையிலக்காநற்றுடான்வாய்க்கும் பராபரமே. என்ற வாக்கில் காமம் எடுத்துக் காட்டாக விளங்குவதை யறிந்தும் அக்காமத்திற்கு இத் துன்மார்க்கச் செய்கையாளர் கூட்டம் இலக்காகவிருப்பதை யுணர்ந்தும் இச்சீர்திருத்தத்தில் பெரும்பணி செய்யவேண்டுகிறோம்.

மணியொளி.

ஜஸ்டிக் கட்சியின் புதியவழி.

சென்னை மாகாண ஜஸ்டிஸ் கக்ஷியார் தங்களின் பழைய தீர்மானங்களை மாற்றிக்கொண்டு புதிய வழியில் புக நேர்ந்தது கண்டு எவரும் சந்தோஷிப்பார் என்பதில் சந்தேகமில்லை. பிராம்மணன் பிறப்பினாலே உயர்ந்தவன் எனக் கருதியபடியால் அது முற்றுந் தவறு எனப் பேசிய நாம் பிறப்பினாலே பிராம்மணன் என்ற காரணத்திற்காக கொள்கையில் நம்மை யனுசரித்திருந்த போதிலும் அவர்களுக்கு நமது கக்ஷியில் இடமில்லை என்னும் திட்டம் போய் நமது வழியில் சிநேகமும் முன்னேற்றத்தில் கருத்தும் கொண்டவர் எவரும் பிராம்மணனாயினும் அன்று எக்குலத்தினனாயினும் நமது கக்ஷியில் சேர்ந்து வேலைசெய்ய இடங் கொடுக்கப்பட்டுவிட்டதால் சென்னை ஜஸ்டிஸ் கக்ஷி புதியபலம் பெற்று முற்போக்கடையும். அத்துடன் அரசியல் விடுதலையும் பெற அவர்களுக்கு இதனால் இடமேற்படுமென என்னுகிறோம்.

லாகூர் அவசரச்சட்டம்.

லாகூர் சதிவழக்கு சம்மந்தமான அவசரச்சட்டம் இப்போதைய சுதந்தரப்போர் காரணமாக இராஜப் பிரதிநிதி லார்டு

இர்வின் பிரபு இயற்றிவைத்த அவசரச்சட்டங்களுள் ஒன்றாகும். இது சட்டப்படி செல்லுமா என்பதை பரிசீலனை செய்ய லாகூர் ஹைகோர்ட்டு வக்கீல் சங்கத்தார் நியமனஞ்செய்த சப் கமிட்டியார் அவசரச் சட்டத்தை இந்தியாவில் கொண்டுவர இந்தியா முழுவதுமோ அல்லது ஒரு பாகத்திலோ அடக்கமுடியாத அரசியல் கொந்தளிப்பேற்படின் அதையடக்க ஓர் அவசரச்சட்டம் செய்ய ; அரசியல் சட்டம் 72 பிரிவின்படி முக்கியமாக இராஜப்பிரதிநிதிக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் இப்பொழுது லாகூர் சதிவிஷயமான வழக்கு நீண்ட நாளாய் கோர்ட்டில் இருப்பதைவிட அவசர நிலைமையொன்றும் ஏற்பட்டு விடாதிருக்கும் பொழுது இச்சட்டம் செல்லுபடியாகத்தக்கதல்லவென்றும் அவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அதற்கேற்ப சமாதானமாக இந்தியா சட்டசபையின் மூலம் இச்சட்டஞ் செய்யப்படாமல் அவசரமாகச் செய்ததன் காரணம் யாதோ?

கூட்டுறவு சங்கங்கள்.

கதரை அபிவிர்த்தி செய்வதில் கூட்டுறவு சங்கங்கள் யாவும் உதவிசெய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்ட சென்னை மாகாண கூட்டுறவு யூனியன் தலைவர் ஸ்ரீமான். ராம்தாஸ் அவர்களின் அறிக்கை சரியானதல்லவென்றும் கதரும் அரசியல் விஷயங்களில் முக்கிய சின்னமாக விருப்பதாலும் பொருளபிவிர்த்திக்குக்குந் தகம் விளைவிக்கக்கூடியதாக விருப்பதாலும் அதில் கூட்டுறவுச் சங்கங்கள் தலையிடுவது சரியில்லை. மீறித் தலையிட்டால் கவர்ண்மெண்டார் சட்டத்தைக் காக்க கூட்டுறவுச் சங்கங்களின் நடத்தையில் தலையிட நேருமென்றும் அது விஷயமான ராம்தாஸ் அவர்களின் அறிக்கை செல்லத் தகுந்ததில்லை என்ற பொருள்படும்படியான கண்டிப்பான எச்சரிக்கை யொன்றை சென்னை அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். இதனால் எவ்வளவு பெருமை சென்னைக் கவர்ண்மெண்டிற்கு உள்ளதென்பதை நாம் அறியக்கூடவில்லை. இது அபிவிர்த்தி மந்திரியின் உத்தரவு போலும்.

ஸ்தல ஸ்தாபனங்கள்.

மேல்கண்ட எச்சரிக்கையைக் கண்டதும் ஸ்தல ஸ்தாபன மந்திரியார் தனது ஆட்சிக்கு உட்பட்டதான ஸ்தல ஸ்தாபனங்கள் சட்டமறுப்பை பாராட்டியோ கைதியானவர்களைப் பாராட்டியோ தீர்மானஞ்செய்யவோ, கூட்டங்களை ஒத்திவைக்கவோ கூடாதென்றும் அதன் ஆதிக்கங்களுக்கு உள்ளிட்ட பள்ளிகளில் மாணவர்கள் தேசிய கீதங்கள் பாடும்படி உத்திரவிடவோ உத்தியோகஸ்தர் சிப்பந்திகளை கதர் கட்டும்படி உத்திரவிடவோ ஸ்தல ஸ்தாபன கட்டடங்களில் தேசியக் கொடிகளைப் பறக்கவிடவோ இன்னோரன்ன செய்கைகளைச் செய்யவோ கூடாதென்றும் மீறிச் செய்தால் அவை கலைக்கப்பட்டோ பொருளுதவியை நிறுத்தப்பட்டோ விடப்படுமெனஎச்சரித்துமுள்ளார். அவைகளெல்லாம் இராஜத்துவேஷ விஷயமென்பது அவரின் உத்தரவு. ஜனப் பிரதிநிதிகளடங்கிய ஸ்தல ஸ்தாபனங்கள் பொதுஜனங்களின் இஷ்டத்தை மீறி இவ்வுத்தரவுப்படியே இனி நடக்கவேண்டும் போலும்.

ஸைமன் யாதாஸ்து.

இந்திய தேசிய சபையாராலும் அதிகமான இந்திய மஹாஜனங்களாலும் பஹிஷ்கரிக்கப்பட்ட சைமன் கமிஷன் தமது யாதாஸ்த்தை அதாவது விசாரணை முடிவை இருகூறுக்கி ஒன்றில் நிலைமையைப் பற்றியும் மற்றொன்றில் சிபார்சைப் பற்றியும் கூறியுள்ளது. அதில் நிலைமையைப் பற்றிக் கூறியுள்ளபாகம் வெளிவந்துவிட்டது அது இந்தியர்களால் எதிர்பார்த்தபடியே தான் உள்ளதே யல்லாமல் விசேஷமாக ஒன்றுமில்லை. இதை கவனித்ததிலிருந்து பின் சிபார்சுகளும் இன்னமாதிரிதான் இருக்கவேண்டுமென்பதர்க்கு அறிகுறியாக வக்கீல்களில் ஒருவரான ஸர் ஜான் ஸைமன் துரையவர்கள் தலைமை கோஷ்டியார் இதைத் தயாரித்துள்ளார்போல் தோன்றுகிறது.

இந்திய சர்வகட்சி மஹாநாடு.

இந்திய நிலைமை இன்னும் ஹத்து மீறிப்போய் விடவில்லை சில லக்ஷக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து பலரையும் வரவழைத்து அதிருப்திகரமான நிலைமையில் லண்டன் மஹா

நாட்டை நடத்தாமல் இப்பொழுதும் முயற்சியெடுத்து இந்தியத் தலைவர்களையும் தலைவர் தலைவரான மஹாத்மாஜீயையும் தேசிய மஹாசபையையுங்கலந்து சமரசமுறையில் இந்தியசர்வகக்ஷி மஹாநாட்டை லண்டனில் நடத்தினால் மிக நன்றாக விருக்கும். அதை விடுத்து இந்தியரில் ஓர் சாரரை அலக்ஷியஞ்செய்து வந்தவர்களைக் கொண்டு பெயரளவில் அம்மஹாநாட்டைநடத்தினால் அதில் பிரயோஜன மொன்றுமில்லாமல் போவதுடன் அதில் நம்பிக்கைகொண்டோரும் அதை இழக்கும்படி பிறகு நேரலாமென்பது எதிர்பார்க்கத் தகுந்ததே.

தடியடிப் பிரயோகம்.

உப்புச்சட்டம் முதல் பல சட்டங்களையும் மீறி நடப்பவர்களையும் அதை வேடிக்கை பார்ப்பவர்களையும் சட்டத்தை மீறியவர்களாக எண்ணியவுடன் அது எச்சட்டம் எப்பிரிவின்படி மீறப்பட்டதாக எண்ணப்பட்டதோ அதன்படி உடனே நடவடிக்கை எடுத்து தண்டிக்கத்தான் வேண்டுமே யல்லாமல் கண்டபடி நிரபராதிகளான கூட்டத்தார் மீது தடியடிப்பிரயோகஞ்செய்வதும் குதிரிகைகளை விரட்டி மிதிக்கச்செய்வதும் எந்த நாகரீகம்வாய்ந்ததென்று சொல்லும் கவர்ண்மெண்டும் செய்யக்கூடியதல்ல. கவர்ண்மெண்டாரின் சட்டத்தை ஜனங்கள் மீறுகிறார்கள் என்பதற்காக கவர்ண்மெண்டார் தங்கள் சட்டத்தைத் தாங்கள் மீறினால் அதைக் கேட்பார் யார்? இதெல்லாம் பொதுஜனங்கள் தங்களை மதியாதிருக்கத்தாங்களே செய்துகொள்ளும் முயற்சியே தவிர ஒருவருடைய தூண்டுதலுமில்லை. இக்கெட்ட முறையை இனியாயினும் கைவிடுவார்களா?

தகுந்தசமயம்! உயர்ந்தவேலை!!

அடுத்துவரும் ஆவணிமாதம் கல்யாணமாத மாகையால் டெம்பரரி எலக்டிரிக் லைட்டு முதலியவைகள் செட்டப் செய்யவும் சாமான்கள் சப்ளை செய்யவும் எங்களை எதிர்பாத்து ஓர் முறை பரீக்ஷிக்க வேண்டுகிறோம். சாஸ்வத எலக்டிரிக் பிட்டிங் கண்டிராக்டும் செய்யப்படும்.

T. R. அரெங்கசாமி முதலியார்,
பள்ளத்தூர்.

'மனம்போலிருக்கும் மாங்கலியம்.'

(திரு. பி. ஸ்ரீ, அவர்கள்)

நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலம் தொடங்கி, நமது நாடு மனோவசிய சாஸ்திரத்தின் தாயாக விளங்குகிறது.

மனிதன் நினைப்பின் வண்ணமே பரிணமிக்கின்றான் என்னும் உண்மையினை நம் முன்னோர் உபநிடத காலத்திலே நன்கு உணர்ந்திருந்தனர். வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனுக்கு ஒரு லட்சியம் அல்லது இலக்குவேண்டும். இலக்கு (லட்சியம்) இல்லாத உயிர் இன்பமில்லாத உயிரே. நினைப்பின் வாயிலாக, லட்சியத்தோடு மனஉலகில் சேர்ந்து அல்லது ஒன்றுபட்டு வாழ்வதே யோகம். யோகம் என்னும் சொல் 'சேர்க்கை' அல்லது 'ஒன்றுபடுதல்' என்று பொருள் தரும் என்பது கவனிக்கத்தக்கது.

'மனம்போல் இருக்கும் மாங்கலியம்'—என்று நமது நாட்டில் சாதாரண ஜனங்களும் சொல்லிக்கொள்வார்கள். 'மனம்போல வாழ்வு என்பதுதான் இப்பழமொழியின் பொருள். இப்பொருளை உணர்வார்க்கு "மதி பெரிதா? விதி பெரிதா?" என்னும் கேள்வியே அவசியமானதன்று. நாமே நமது விதியை விதித்துக்கொள்ளுகிறோம். முற்காலத்தில் நமது நாடு இவ்வுண்மையை உணர்ந்து ஒழுகிவந்தது. இருள் சூழ்ந்த இடைக்காலத்தில், இவ்வுண்மையை மறந்துவிட்டது. இதனால் இந்தியா துன்பக்கடலுள் மூழ்கிக்கிடக்கிறது.

இடைக்கால இந்தியாவில், சக்தியை—தன்னம்பிக்கையை—ஊட்டக் கூடிய யோக உண்மை மறைந்து, பொருளற்ற பழக்கங்களும் சமூக வாழ்க்கைக்குப் பொருந்தாத சாதனங்களும் மூடநம்பிக்கைகளும் மலிந்து தோன்றின. மனோசக்தியில் மறைந்துகிடக்கும் தெய்வசக்தியை வெளியிட்டு, உலகில் செயற்கருஞ் செயல்கள் செய்து வாழ்வதற்கு வழி காட்டும் மனோவசிய வித்தையை நம்மவர் எவ்வாறாகவோ மறந்த; போலி வேதாந்தம் பேசி வீண் பொழுது போக்குவாராயினர். இதனால் நாடு பாழ்பட்டது.

பழைய மனோவசிய சாஸ்திர உண்மைகள் இப்போது மேனுடுகளிலிருந்து, ஹிப்னுடிஸம் மெஸ்மெரிஸம் முதலிய புதிய பெயர்களோடு மாறுவேடம்பூண்டு வருகின்றன. புதிய உடைகளில் நாம் மீண்டும் நமது பழைய நண்பர்களையே சந்திக்கிறோம்.

பழையகால மனிதர்கள் 'இரகசியம்' 'இரகசியம்' என்று மனோவசிய ஞானத்தை மறைத்து வைத்தார்கள். இவ்வித்தை இப்பொழுது அமெரிக்கா, ஐரோப்பா முதலிய மேல்நாடுகளில் ஆராய்ச்சி செய்யப்பட்டு, ஒழுங்கான 'ஸயன்ஸ்' (நவீன சாஸ்திர) உடை தரித்து வருகிறது.

மனத்தின் சக்தி.

மனத்தின் சக்தியை ஒருவாறு உணர்ந்துகொண்டபின், மனத்தை வசமாக்கும் ஆற்றல் மெள்ள மெள்ள வந்தடைவதாகும். உனக்குத் தன்னடக்கம் வேண்டுமெனின் நான் புலனடக்கம் உள்ளவனுகி வருகிறேன் என்று நினைத்துக்கொள். ஏதாவது தீமை ஏற்படும்போது; இது ஒழிந்துபோகிறது; ஒழிந்துபோகிறது என்ற மந்திரத்தால் மனோதர்மத்தை வசமாக்குதல் வேண்டும். அப்பொழுது அத்தீமை கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துபோம். 'எண்ணங்களின் எஜமானன் நான் என்று நீ கருதுவதால், நீ அவ்வாறேயாகிறுய் என்று மனோவசிய சாஸ்திரம் போதிக்கின்றது. 'நான் வெற்றியடைகிறேன்; நான் வெற்றியடைந்து கொண்டிருக்கிறேன்' 'என்னும் மந்திரமேயாகும். மந்திர சித்திக்கு நம்பிக்கையும் விடாமுயற்சியும் வேண்டும். ஆனல் விடாமுயற்சி என்பது சிறிதாவது சிரமமில்லாத விடாமுயற்சியாகவும் ஒரு சிறிதும் படபடப்பில்லாத விடாமுயற்சியாகவும் இருத்தல்வேண்டும். பகுத்தறிவுக்கு உட்பட்டே நமது விருப்பத்தை மந்திரசித்தியால் நிறைவேற்றிக் கொள்ள முயல்வது சிறந்த நற்பயனளிக்கும்.

நம்பிக்கையோடு சேர்ந்த மந்திர ஜபம் அபார சக்திவாய்ந்தது. இது பகுத்தறிவுக்கு உட்பட்ட விருப்பங்களை யெல்லாம் தவருது நிறைவேற்றத்தக்க எத்தகைய நிலைமையிலும் சந்தர்பத்திலும் அஞ்சாது முற்பட்டு நன்னம்பிக்கைபோடு மனோதர்மத்தை மந்திர ஜபத்தால் தூண்டி வேலைவாங்குவோர் வெற்றிவீரராக விளங்குவரென்பது திண்ணம்.

விகடத் துணுக்குகள்.

ராமன்:—ஐயா! மடாதிபதி மடச்சாமி. ஒய் பேப்பர் ஒன்று வரவழைத்தால் உலகானுபவம் தெரியுமே. ஒன்றுக்கு ஆர்டர் செய்கிறது தானே?

சாமியார்;—நாம் ஆச்சிரமத்திலிருந்துகொண்டு பேப்பர் பார்ப்பது அழகல்ல. புராணம் சாஸ்திரம் படித்தால் நலம். அதற்கு அதிக வாசிப்பு வேண்டும். அந்தக்கலம் நம்மிடம் 0000.

ராமன்:—பேப்பர் பார்ப்பது அழகல்ல. கீப்பர் பார்ப்பது உசிதந் தானே? அது எந்த சாஸ்திர முறையோ?

சாமியார்:—கீப்பரைக் கையாளாத மகான்கள். மரப்பொம்மைகளாவார்கள் என மடைய புராணம் கூறுகிறது.

ஃ ஃ ஃ

சாப்பிட வந்தவன்:—இந்த வசதியற்ற சோற்றுக்கா காலே மூன்று வீசம் வாங்குறீர் இந்தப் பணம் எங்கே வைப்பீர்.

கிளப்புக்காரன்:—அடே போடா! இந்த வருமானம் பத்தாமல் எங்கள் வீட்டுப் பெண்டுகள் பல மாதிரி வருமானம் பார்க்கிறார்கள். அது தெரியாதா?

ஃ ஃ ஃ

யாசகன்—ஆச்சி உங்கள் செட்டியார் நல்ல தர்மிஷ்டராமல்லவா? எனக்கு அவர்களிடம் சொல்லி ஒரு வேஷ்டி வாங்கித் தாருங்கள்.

ஆச்சி:—செட்டியார் நல்லவர்தான். ஆனல் இப்பொழுது நம்மள் வீட்டிற்கு ஒரு ஐயர் வந்திருக்கிறார் அவர் பழைய தர்மங்களை மட்டுப் படுத்தி புதிய தர்மத்தையும் நிறுத்தி தன் தொப்பையை நிறப்பிக் கொள்ளுகிறார். அந்தப்பாவி தொலையுமட்டும் வராதே.

ஃ ஃ ஃ

சுப்பண்ணு:—ஓய் நவமணியாரே உம்மைப்பற்றிச் சில பத்திரிகைகாரர் மதிப்புரை தந்தும் சிலர் தராமலுமிருக்கிறாரே அதென்ன காரணம்.

நவமணியார்:—அவர்களுக்கு பாதிராத்திரியில் கிடைத்திருக்க லாம்.

ஃ ஃ ஃ

சுப்பண்ணு:—போய் வந்ததில் சந்தாக்கள் ஏராளந்தானே?

நவமணியார்:—ஏராளந்தான் பாதி சந்தா செத்துப் போச்சு.

ஃ ஃ ஃ

கிழவர்:—உபாத்தியாரே! ஏன் உமது புத்திரியை புருஷன் வீட்டிற்கு அனுப்பாமல் வைத்திருக்கிறீர்?

வாத்தியார்:—என் மருமகன் வீட்டில் காசு கிடையாது.

கிழவர்:—காசுக்கும் உம்மகளுக்கும் என்ன சம்பந்தம்.

வாத்தியார்:—'இல்லாளை இல்லாளும் வேண்டாள்' என்பதை நான் படித்திருக்கிறேன். அவளுக்குந் தெரியும்.

ஃ ஃ ஃ

வாதி வக்கீல்:—ஓய்! வாதி எதிரியிடம் புதவாரம் வந்து பார்க்கும் பொழுது என்ன மணி இருக்கும்.

சாட்சி:—சரியாக 5-ம் 45¾.

வக்கீல்:—எண்டா அவ்வளவு சரியாய் மணி பார்த்தாய்.

சாட்சி:—வீணர்கள் எப்போதாவது கேட்டால் பதில் சொல்ல.

ஆவன்னு:—ஓய்! குருட்டு வாத்தி உம்மிடம் படித்தவர்களில் இப்போது யாராவது இருக்கிறார்களா?

காவன்னு:—ஆம். திருச்சி செண்டிரல் ஜயிலில் உள்ளவர்களில் பாதிப்பேர் என்னிடம் படித்தவர்கள்தான்.

ஒருவன்—அம்மா! உன் கணவன் பேர் என்ன?

ஒருத்தி:—என்ன ஐயா, நீர் கேட்கிறது. எனக்குள்ள எந்தக் கணவன் பேரைச் சொல்லுவது அதைக்கேட்க அரை நாள் செல்லுமே.

க:—ரெயில்வே ஸ்டேஷனில் ஏன் முன்னமேயே டிக்கெட் கொடுப்பதில்லை?

ங:—முன்னாடி சாவகாசமாகக் கொடுத்தால் டிக்கெட் பணம்போக மீதியைக் கணக்காகக் கொடுக்கவேண்டுமே என்றுதான்.

நவமணி.

நமது நவமணிக்கு வருட சந்தா ரூபாய் ஒன்றே! யாவரும் பெற்று நவமணியைப் படித்துப் பயன்பெற இதுவே சமயம். இச் சமயம் தவறினால் ஒரு வருடம் நவணி பெறும் அதிர்ஷ்டம் உங்களை விட்டகலும். எனவே உடனே நவமணிக்கு ரூபாய் ஒன்று மணியார்டர் செய்யுங்கள்.

நவமணி சந்தாதார்களாக 6 பெயரைச் சேர்த்து ஒரே தடவையில் நமது காரியாலயத்திற்கு ரூபாய் அனுப்பும் அன்பர்களுக்கு ஒரு வருட நவமணி சந்தா இல்லாமலே இனாமாக அனுப்பப்படும்.

சந்தா விபரம்.

உள்நாடு வருட சந்தா	...	ரூ.	1—0—0
வெளிநாடு ஷை	...	ரூ.	1—8—0
தனிப்பிரதி ஒன்றுக்கு	...	ரூ.	0—1—0

விளம்பர விகிதம்.

முழுப் பக்க விளம்பரம்	தடவை	ஒன்றுக்கு	ரூ.	4—0—0
அரைப்பக்கம்	,,	,,	ரூ.	2—8—0
அட்டை முழுப் பக்கம்	,,	,,	ரூ.	5—0—0
அரைப் பக்கம்	,,	,,	ரூ	3—0—0

முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர்,
நவமணி பத்திரிகாலயம்
பள்ளத்தூர்.
(இராமனாதபுரம் ஜில்லா)

... வேண்டுமா?

ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுதியது பாடிய வரலாறு புத்தகம்	1-க்கு	ரூ	0—2—0
இரட்டைப்புலவர் சரித்திரம் புத்தகம்	1-க்கு	ரூ	0—6—0
எனது நெடுங் கனவு புத்தகம்	1-க்கு	ரூ	0—6—0
தமிழன் புத்தகம்	1-க்கு	ரூ	0—6—0

வேண்டுமானால் எங்களிடம் கிடைக்கும்.

வீ. பி. செலவு வேறு.

'நவமணி' பத்திரிகாலயம், பள்ளத்தூர்.

எல்லாவியாதிகளுக்கும் சிறந்த மருந்து எது?

மணிரசம் ஒன்றே!

இதன் விலை புட்டி ஒன்றுக்கு	ரூ. 1—8—0
மணிதந்த சுத்திப் பொடி டப்பி 1-க்கு	ரூ. 0—4—0
மணி மாத்திரை 50 கொண்ட பாட்டில் 1-க்கு	ரூ. 1—4—0
மணி ஓமத்திராவகம் முழுபாட்டில் 1-க்கு	ரூ. 1—4—0
மேற்படி அரை பாட்டில் 1-க்கு	ரூ. 0—12—0

கிடைக்குமிடம்:—

மணி ஔஷதாலயம்,

P. O. கொத்தமங்கலம்.

உயர்ந்த சாமான்! குறைத்த விலை!!

எல்லாவித எலக்டிரிக் சாமான்களும் நயமான தாயும் குறைந்த விலையிலும் எங்களிடம் கிடைக்கும் ஒரு முறை ஆர்டர் செய்தோ நேரில் வந்தோ பரீக்ஷிக்க வேண்டுகிறோம். எலக்டிரிக் பிட்டிங் கண்டிராக்டும் ஒப்புக்கொள்ளப்படும்.

T. R. அரெங்கசாமி முதலியார்,

எலக்டிரிக் என்ஜினீயர் அண்டு கண்டிராக்டர்.

பள்ளத்தூர்

Printed and Published by S. RM. Ramanatha Mud[...]
at Vedhambal Press, Pallatur. (Ramnad Dt.)